Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 72

வெள்ளிக்கிழமை
06 பெப்ரவரி 2026

தை 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வடக்கில் இன்று மழை தொடரும்

யாழ்ப்பாணம், பெப். 6
வடமாகாணத்தில் நிலவும் மழையுடனான காலநிலை இன்றும் தொடரும் - இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்

»11

# கரிநாள் போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை தேவை

### இந்திக்க அனுருத்த வலியுறுத்து



கொழும்பு, பெப்ரவரி 6

**இலங்கையின் சுதந்திரதினத்தை வடக்கு மாகாணத்தில் கரிநாளாக கடைப்பிடித்துள்ளனர். இதற்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.**

»04

## இலங்கை இராணுவத்தை அவமதிக்கின்றார் அநுர!

### நாமல் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 6
இராணுவத்தை அவமதிக்கும் வகையில் ஜனாதிபதி அநுர செயற்படுகின்றார் என்று, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்சகுற்றஞ்சாட்டியுள்ளார்.
ஸ்ரீலங்காவின் சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் போர்வெற்றி

»11

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக யாழ். நகரில் இன்று ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 6
காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியை வலியுறுத்தி, சம உரிமை இயக்கம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகப் போராடிய லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகி

»11

## கிணற்றடியில் தவறிவீழ்ந்து குடும்பப்பெண் உயிரிழப்பு!

சாவகச்சேரி, பெப். 6
கிணற்றடியில் தவறி வீழ்ந்த பெண்ணொருவர் மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளார். இந்தத் துயரச்சம்பவம் மட்டுவில் வடக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

»04

### வடமராட்சியில் சேவையில் ஈடுபடும்

# இ.போ.ச. பேருந்து மீண்டும் பழுதடைவு

### மாணவர்கள், மக்கள் அவதி





யாழ்ப்பாணம், பெப். 6
யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டிலிருந்து நேற்றுக்காலை பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்ட இ.போ.ச. பேருந்து, நாகர்கோவில் பகுதியில் பழுதடைந்து இடைநடுவில் நின்றது.
இதனால், அந்தப் பேருந்தில் பயணித்த மாணவர்கள், அரச அலுவலர்கள், நோயாளர்கள் பெரும் அசௌகரியத்தை எதிர் கொண்டனர்.

»11

காலி சிறையில் 19 கைபேசிகள் **மீட்பு**

விரிவு பக்கம்:-02

## ஜனாதிபதி அநுர இந்தியா பயணம்



கொழும்பு, பெப். 6
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த மாதத்தின் இறுதியில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பான மாநாடு, இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இந்த மாதத்தின் இறுதியில் நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி

»11



முச்சந்தி முரளி

"மின்கட்டணத்தைக் குறைக்கிறம் எண்டு சொல்லிக்கொண்டு மற்றப்பக்கமா கட்டணத்தை ஏத்திக்கொண்டெல்லோ போகினம்"

## 3 ஆண்டுகளில் 30 வீதத்தால் மின்சாரக் கட்டணம் குறையும்

### எரிசக்தி அமைச்சர் வாக்குறுதி



கொழும்பு, பெப். 6
பொதுமக்களுக்கு ஏற்கனவே வாக்குறுதி வழங்கியதற்கு ஏற்ப, மின்சாரக் கட்டணத்தை 30 வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

»11

## மக்களின் விருப்பங்களுக்கு மாறாக ஆட்சியை வைத்திருக்க மாட்டோம்!

### ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, பெப். 6
மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஆட்சியில் இருக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்று, அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளரான ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
இலங்கையின் அண்மைக்கால அரசியற் போக்குத் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு ரில்வின் சில்வா நேர்காணல் வழங்கியுள்ளார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஒரே

»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 05.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4338 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 01 24 33 58 |
| விசேட எழுத்து | S |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 05.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1405 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 25 29 60 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 05.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0364 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 5 8 9 4 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 05.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2444 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கங்கள் | 35 69 75 80 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 05.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6096 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 3 7 4 5 3 7 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 05.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2126 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 02 47 55 66 |
| விசேட எழுத்து | S |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 05.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0212 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 12 24 39 |

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 05.02.2026 | வியாழக்கிழமை | 0804 | D | 1 4 9 3 1 6 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 05.02.2026 | வியாழக்கிழமை | 3070 | R | 06 10 48 69 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 05.02.2026 | வியாழக்கிழமை | G | 04 14 77 78 | 5231 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 05.02.2026 | வியாழக்கிழமை | 0900 | 12 22 23 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 05.02.2026 | வியாழக்கிழமை | தனு | 01 14 20 43 | 4782 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 05.02.2026 | வியாழக்கிழமை | V | 05 | 06 31 58 75 | 2246 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 05.02.2026 | வியாழக்கிழமை | U | 21 23 26 52 | 2896 |

# 10க்கும் குறைவான ஆசிரியர்களுடன் நாட்டில் 3 ஆயிரம் பாடசாலைகள்!

## 50க்கும் குறைவான மாணவர்களுடன் 1,645 அரச பாடசாலைகள்

**கொழும்பு, பெப்.6**

**நாடு முழுவதும் 10க்கும் குறைவான ஆசிரியர்களைக் கொண்ட 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச பாடசாலைகள் உள்ளன என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2025ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகளின்படி, நாடு முழுவதும் 10 ஆயிரத்து 47 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் 3 ஆயிரத்து 65 பாடசாலைகளில் 10க்கும் குறைவான ஆசிரியர்கள் உள்ளனர் என்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. அவற்றில் ஒன்று தேசியப் பாடசாலை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் ஆயிரத்து 645 அரச பாடசாலைகளில் 50க்கும் குறைவான மாணவர்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 50க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அரச பாடசாலைகளில், ஒரு தேசியப் பாடசாலையும், ஆயிரத்து 644 மாகாணப் பாடசாலைகளும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

51 முதல் 100 மாணவர்கள் வரை உள்ள ஆயிரத்து 648 அரச பாடசாலைகள் உள்ளன என்றும், அந்தப் பாடசாலைகள் அனைத்தும் மாகாணப் பாடசாலைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2025ஆம் ஆண்டில் அரச பாடசாலைகளில முதலாம் தரத்துக்குச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. 2025ஆம் ஆண்டில் தரம் ஒன்றில் 2 இலட்சத்து 66 ஆயிரத்து 281 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-இ)



# ஹெரோய்னுடன் இருவர் கைது!

கொழும்பு, பெப்.6

கிரிபத்கொடை பிரதேசத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் தாய்லாந்துப் பிரஜை உட்பட இருவர் களனி பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 3 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்தப் பெறுமதி சுமார் 6 கோடி ரூபா எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# மனநலச் சுகாதாரச் சட்டம் நவீனமாக்க நடவடிக்கை!

கொழும்பு, பெப்.6

இலங்கையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் புதிய மனநலச் சுகாதாரச் சட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகச் சுகாதாரப் பிரதி அமைச்சர் மருத்துவர் ஹங்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

அங்கொடையிலுள்ள தேசிய மனநலச் சுகாதார நிறுவனத்தின் 100ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய மனநலக்கொள்கை சுமார் நூறு ஆண்டுகள் பழமையானது. இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப மனநலச் சுகாதாரச் சேவைகளை நவீனமயப்படுத்துவது அவசியமாகும்.

புதிய சட்டத்தைக் கொண்டுவருவது சவாலான காரியம் என்றாலும், இதற்கான முதற்கட்ட வரைவுப்பணிகள் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இந்த வரைவு தற்போது அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன், புதிய சட்டம் தொடர்பான பொதுமக்களின் ஆலோசனைகளையும் கருத்துகளையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# காலி சிறையிலிருந்து 19 கைபேசிகள் மீட்பு

கொழும்பு, பெப்.6

காலி சிறைச்சாலையின் சிறைக்கூடங்களில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போது, 19 கையடக்கத் தொலைபேசிகள், சிம் அட்டைகள், போதைப் பொருள்கள் என்பவை மீட்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலைத் தலைமையகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. (ச-இ)



# பால் உற்பத்தித் தன்னிறைவுக்கு பாகிஸ்தானிலிருந்து காளைகள்



இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான நீண்டகால நட்புறவை உறுதிப்படுத்தும் வகையில், பாகிஸ்தானின் உயர்தர 'சாஹிவால்' இனக் காளைகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இலங்கையின் கால்நடை வளர்ப்புத்துறையை நவீனமயமாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவை உலகளவில் அதிக பால் கொடுக்கும் திறன் கொண்டவை. அதிக வெப்பத்தைத் தாங்கி வளரக்கூடியவை மற்றும் நோய்களை எதிர்க்கும் அபார ஆற்றல் கொண்டவை.


இந்தக் காளைகளிடமிருந்து உயர்தர விந்தணுக்களைப் பெற்று, உள்ளூர் மாடுகளுக்குச் செயற்கைச் சினைப்படுத்தல் மூலம் செலுத்துவதன் மூலம் இலங்கையிலுள்ள மாடுகளின் இனத்தரம் உயர்த்தப்படும். இதன்மூலம் உள்நாட்டுப் பால் உற்பத்தி பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து அதிக விலைக்கு பாற்பொருள்களை இறக்குமதி செய்வதைக் குறைத்து இலங்கையைப் பால் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றுவதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# குளவிகள் கொட்டியதில் மாணவர்கள் பலர் பாதிப்பு

## கிளிநொச்சியில் துயரம்



**கிளிநொச்சி, பெப்.6**

**பெரிய குளவிக்கூடு ஒன்று கலைந்து குளவிகள் கொட்டியதில் 39 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நேற்றுக்காலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான பயிற்சிகளுக்கு மாணவர்கள் தயாராகிக் கொண்டிருந்த நிலையில் பெரிய குளவி கூடு ஒன்று திடீரென கலைந்துள்ளது.

39 மாணவர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மாணவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற முயன்றபோது சில ஆசிரியர்களும் குளவித்தாக்குதலுக்கு உள்ளாகினர். எவருக்கும் உயிராபத்து இல்லை என மருத்துவமனைத் தரப்பு உறுதிப்படுத்தியுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாடசாலை நிர்வாகத்தால் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு குளவிக் கூட்டின் ஆபத்து குறித்தும், அதை அகற்றவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-214,113)



## ரில்வின் குழுவினர் டில்லிக்குப் பயணம்

கொழும்பு, பெப்.6

இந்திய கலாசார உறவுகள் கவுன்சிலின் அழைப்பின் பேரில், மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான ஒரு குழு நேற்று வியாழக்கிழமை இந்தியாவின் புதுடில்லிக்குப் புறப்பட்டது.

புதுடில்லியைத் தவிர குஜராத் மற்றும் கேரளாவுக்கும் செல்ல உள்ளனர். அங்கு அவர்கள் அந்தந்த மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் கலந்துரையாடுவார்கள்.

இந்தியாவின் விவசாயம், தொழிற்றுறை மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பான மையங்களையும் அவர்கள் பார்வையிடுவார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன் மற்றும் கிட்ணன் செல்வராஜ் ஆகியோரும் இந்தப் பயணத்தில் இணைந்துள்ளனர். (ச-இ)

## வல்லை - துன்னாலை வீதி சீரமைப்புப்பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.6

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின், 'மறுமலர்ச்சிக்கான பாதை' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், தொண்டைமானாறு வல்லை துன்னாலைவீதியின் புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல தசாப்தங்களின் பின்னர் மக்களின் தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து, 252.5 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளது. 3.9 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதியின் புனரமைப்புப்பணிகள் அடுத்த வருடம் முற்பகுதியில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க-159)

## இந்தியாவிலிருந்து புனித தாதுக்கள்!

இந்திய அரசாங்கத்தின் முழுமையான அனுசரணையுடன் புனித தாதுக்கள் நேற்றுமுன்தினம் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்தியாவுக்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் இந்தப் புனித தாதுக்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன.

இவை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை கொழும்பு கங்காராம விகாரையில் பொதுமக்கள் தரிசிப்பதற்காக வைக்கப்படவுள்ளன. (ச-இ)



## கடமைகளைப் பொறுப்பேற்றார் புதிய கணக்காய்வாளர் நாயகம்

கொழும்பு, பெப்.6

இலங்கையின் புதிய கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட எல்.எஸ்.ஐ. ஜயரத்ன நேற்றுத் தனது கடமைகளை தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் பொறுப்பேற்றுள்ளார். இலங்கையின் 42ஆவது கணக்காய்வாளர் நா[illegible]கப் பதவியேற்றுள்ள அவர், இந்தப் பதவிக்குத் தெரிவான முதல் பெண் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

எல்.எஸ்.ஐ. ஜயரத்ன வங்கி, நிதி, காப்புறுதி, வரி, திறைசேரி சேவைகள் மற்றும் கடன் முகாமைத்துவம் [illegible] அனுபவம் வாய்ந்த[illegible]வராவார். (ச-இ)




## பராக்..பராக்... பராமரிப்புக்காரர் பராக்...!

யாழ்ப்பாணத்தில இப்ப ஒரு புது பிஸ்னஸ் கொடிகட்டிப் பறக்குது. வயசுபோன ஆக்களை அவையின்ர வீட்டில போய்ப் பராமரிக்கிறதுதான் அந்த பிஸ்னஸ். ஊரிப்பட்ட கொம்பனியள் உந்த பிஸ்னஸில இறங்கி இருக்கினம். அந்தளவுக்கு இப்ப வயசுபோன ஆக்களைப் பராமரிக்க ஊரில சொந்தபந்தங்கள் இல்லை. பிள்ளைகுட்டியளை வழிச்சுத் துடைச்சு ஒருத்தர் விடாமல் எல்லாரையும் வெளிநாட்டுக்கு அனுப்பினால், வயசுபோன காலத்தில பெத்தவையைப் பராமரிக்க ஆர் வரப்போயினம்? காசை மட்டும் கத்தை கத்தையா அனுப்புவினம். அதைவைச்சு என்ன செய்ய?

எட்டுப் பேரைப் பெத்து வளர்த்தன், ஆனா ஒரு நேரக் கஞ்சி தர ஒருத்தனுமில்லை. எல்லாரும் வெளிநாட்டில. என்னைக் கொண்டுபோய் கைதடி முதியோர் இல்லத்தில விடுங்கோ எண்டாலும் மாட்டன் எண்டுறாங்கள். அங்க விட்டால் தங்கட கௌரவம் போடுமாம் எண்டு தனிமையில வாழுற வயதான அம்மா ஒராள் சொல்லி அழுகிறா. முதியோர் இல்லங்களில பெத்தவையைக் கொண்டுபோய் விட மனமில்லாதவை, அவையளைப் பராமரிக்கிற கொம்பனியளிட்டப் போயினம். அந்தக் கொம்பனியளும் எங்கட வேலைகாரர் எல்லாரும் 'நேர்ஸிங்' படிச்சவை. உங்கட அம்மா, அப்பாவை நீங்கள் கவனிக்கிறதைவிட வடிவாப்பாப்பினம் எண்டு கதைவிடுவினம். அந்தக் கதையில மயங்கி, அவையையே தங்கட வீட்டில இருக்கிற வயதானவையைப் பராமரிக்கச் சொல்லி பிள்ளை யள் ஓகே சொல்லிப்போடுவினம். ஒருநாள் பராமரிப்புக்கு மட்டும் மூவாயிரத்தில இருந்து ஆறாயிரம் ரூபா மட்டும் உந்தக் கொம்பனியள் கறக்கினம். அந்தக் காசில அரைவாசியைத் தாங்கள் விழுங்கிக் கொண்டு, ரண்டாயிரத்தைதான் வேலை செய்யிறவைக்கு குடுக்கினமாம். அப்பிடி நேர்ஸிங் படிச்சதெண்டு சொல்லிக்கொண்டு பராமரிப்பு வேலைக்கு வாறவை யும், ஏதோ ரூருக்கு வந்தவை மாதிரித்தான் நடக்கின மாம்.

வீட்டு முத்தம் கூட்டமாட்டினம், ஒரு குப்பை, கஞ்சல் இருந்தாலும் பொறுக்கிப் போடமாட்டினம் , அதைச் செய்யச் சொல்லிக் கேட்டால் நேர்ஸிங் படிச்சனாங்கள் , உதெல்லாம் செய்யமாட்டம் எண்டு பிலாக்கனம் மட்டும் வடிவாப் படிப்பினமாம். பாரிசவாதம் வந்தவை படுத்த படுக்கையாக் கிடக்கேக்க, இவையள் ஆடி அசைஞ்சு விடிய ஒன்பது மணிக்குத்தான் எழும்புவினம். அப்பவும் படுக்கையில கிடக்கிற வருத்தக் காரருக்கு 'பம்பஸை' மாத்திறதை விட்டிட்டு, தங்களைச் சீவிச் சிங்காரிக்கப் போடுவினமாம். அதுக்குப் பிறகுதான் எந்தவேலையையும் செய்வினம். வருத் தக்காரர் எண்டா இயற்கை உபாதையள் எப்ப வருமெண்டு சொல்லேலாதுதானே. ஆனால் இவையள் ஒருநாளைக்கு ரண்டுதரம் தான் பம்பஸ் மாத்தலாம் எண்டு சொல்லிப்போடுவினமாம். அதுமட்டும் வருத்தக்காரர் நாறிக்கொண்டு கிடக்கவேண்டியதுதான். பராமரிப்புக்குப் போனவை அதைப்பற்றிக் கவனிக்காமல் தங்கட பாட்டில , போனில பாட்டுக் கேட்டபடி இருப்பினமாம்.

இதுமட்டுமில்லை, இன்னும் கனக்க விசயமிருக்கு. அதுகளை நாளையிண்டைக்குப் பாப்பம்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடரால் பாதிப்புற்ற மாணவர்களுக்காக 'சுரக்ஷா' காப்புறுதி

கொழும்பு, பெப்.6
இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு மற்றும் சூறாவளி போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 'சுரக்ஷா' காப்புறுதித்திட்டத்தின்கீழ் விசேட நன்மைகளை வழங்க ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.
கல்வி அமைச்சின் விசேட கோரிக்கைக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
அதன்படி 2025.11.26 முதல் 2025.12.31 வரையான காலப்பகுதியில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மற்றும் உயிரிழந்த பெற்றோரின் பிள்ளைகள் இந்த இழப்பீட்டுக்கு விண்ணப்பிக்கமுடியும்.
அனர்த்தம் காரணமாகப் பெற்றோரை அல்லது பாதுகாவலரை இழந்த மாணவர்களுக்கு வருமான எல்லைகளைக் கருதாது நிதியுதவி வழங்கப்படும்.
அனர்த்த விபத்துகளுக்காகப் பெறப்பட்ட வெளிவாரிச் சிகிச்சைகள், மருந்துக் கொள்வனவுகள் மற்றும் பரிசோதனைகளுக்காக ரூ.20,000 வரை காப்புறுதி நஷ்டஈடு வழங்கப்படும்.
இந்தக் காலப்பகுதிக்குள் இடம்பெற்ற சம்பவங்களுக்கான மருத்துவ ஆவணங்கள் அனர்த்தத்தில் சேதமடைந்திருந்தால், பாடசாலை அதிபர் மற்றும் கிராம உத்தியோகத்தரின் பரிந்துரைக் கடிதத்தைப் பயன்படுத்தி நன்மைகளைப் பெறலாம். (ச-இ)

## பருத்தித்துறையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம்,பெப்.6
பருத்தித்துறைப் பிரதேச செயலகமும், 521 infantry brigade பருத்தித்துறையும் இணைந்து நடத்தும் குருதித் தான முகாம் இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதிப்பற் றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (சு-100)

## தேசிய பொங்கல் விழா

யாழ்ப்பாணம், பெப். 6
சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும், சுன்னாகம் சமுர்த்தி வங்கியும் இணைந்து நடாத்தும் தேசிய பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் சமுர்த்தி வங்கியில் இடம்பெறும். உடுவில் பிரதேச செயலர் திருமதி.பிரேமினி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (சு)

### கிணற்றடியில்...

சாவகச்சேரி பிரதேசசெயலக சமுர்த்தி வங்கியின் நுணாவில் கிளையில் பிரதி முகாமையாளராக பணியாற்றிவந்த யோகராசா நளினி (வயது-52) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-131)

### கரிநாள்...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- நாட்டில் இனவாதத்துக்கு இடமில்லை என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். ஆனால், வடக்கு மாகாணத்தில் நாட்டின் சுதந்திரதினத்தை கரிநாளாகக் கடைப்பிடித்துள்ளனர். இந்த பாரதூரமான இனவாதச் செயற்பாட்டுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுதந்திரதினத்தில் அங்கு கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை அவர்கள் தொடர்ச்சியாக மேற்கொள்கின்றனர். எனவே, இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டும் - என்றார். (அ-ம-...)

06.02.2026 வெள்ளிக்கிழமை

# கலைத்தூது அழகியல் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளைமறுதினம்!

யாழ்ப்பாணம், பெப். 6
திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் 15ஆவது பரிசளிப்பு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.
கல்லூரியின் அதிபர் திருமதி மேரி அஞ்செலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இசைத்துறைப் பேராசிரியர் திருமதி சுகன்யா அரவிந்தனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. ஸ்ரீகுமரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம)



## மணமகள் தேவை

1. மயிலிட்டி கோப்பாய், இந்து கௌரவ குலம் (K) 1995, திருவாதிரை, BBM, Jaffna University, Government officer மாப்பிள்ளைக்கு பெண் தேவை (54941).
2. மாவிட்டபுரம், இந்து கௌரவகுலம் (K), 1988 ரோகினி, MSc, France citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(46157)
3. அச்சுவேலி, இந்து கௌரவகுலம் (K), 1986, பூரட்டாதி, B.Eng electrical and Electonic (ICBT), Electrical Ungineering மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (51945)
4. இளவாலை, இந்து கௌரவகுலம் (K), 1993 அத்தம், Electronic Engineering (Moratuwa university) Electronic பிள்ளைக்கு பெண் தேவை.(38889)
5. முல்லைதீவு - ஆனைக்கோட்டை, கிறிஸ்தவம், 1995, LLM, LLB, LPC, Solicitor and Runing Law fairm UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (59137)
6. முல்லைதீவு, இந்து குருகுலம், 1994, அத்தம், MSc, Computer Science (University of Moratuwa) மாப்பிள்ளைக்கு பெண் தேவை (39917).
7. வல்வெட்டித்துறை, இந்து, குருகுலம், 1991, அவிட்டம், PHD, Australia Citizen , Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை (39976).
8. பருத்தித்துறை, இந்து, குருகுலம், 1991, மிருகசீரிடம், B.Com (Jaffna University) Goverment officer மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (39598).
9. யாழ்ப்பாணம், இந்து கௌரவகுலம் (V), 1988, சுவாதி, MSc, BSc UK University, Quantity Surveyor, UK Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(33913)
10. சிருபிட்டி-நீர்வேலி, இந்து, கௌரவகுலம், 1994, கேட்டை, ACCA, PGDP, Untermediate staff Accountant, Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(57140)

S.Sharma J.P
077 189 0367
077 5393 728


# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 01 |
| 01 | 02 |
| 1934 | 2026 |



## திருமதி.துரைரட்ணம் அன்னலட்சுமி (அன்னக்கா)

யாழ்.சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், சித்தங்கேணி, கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட துரைரட்ணம் அன்னலட்சுமி அவர்கள் **01.02.2026** ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராமலிங்கம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைரட்ணம் (இரும்புக்கடை துரை) அவர்களின் அன்பு மனைவியும்,தர்மராஜ் (தாஸ்), பங்கஜம் (தங்கா), வசந்தராணி (சூட்டி), ரமணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயகலா (பபி), வசந்தகுமார், இந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும்காலஞ்சென்றவர்களான சிவனடியான, கைலாயபிள்ளை, மகேஸ்வரி, நவரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், செல்லத்துரை, நாகரட்ணம், நாகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரஜித்தா-ஐங்கரன், தர்மிதா, துஷித்தா, துளக்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேத்தியும், சுபேக்ஷா ஐங்கரன், மௌனிஷா ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **06.02.2026** வெள்ளிக்கிழமை மற்றும் **07.02.2026** சனிக்கிழமை அன்று இல.**23 Vaverset Place, Wellawatte, Colombo 06** எனும் முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, அதனைத்தொடர்ந்து **08.02.2026** ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப **09:30** மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் மு.ப **11:30** மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தொடர்புகளுக்கு :
சூட்டி- மகள் – 0767213912

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# வருமுன் காப்போம்

கொழும்புக்கு அடுத்தபடியாக, நீரிழிவு நோயாளிகள் அதிகளவு அடையாளம் காணப்படும் மாவட்டமாக யாழ்ப்பாணம் மாறியிருக்கின்றது என்ற தகவல் ஒரு எச்சரிக்கை மணியென்றே கொள்ளவேண்டும். இளைஞர்கள் மற்றும் யுவதிகள் மத்தியில் இந்தத் தாக்கம் அதிகரித்துள்ளதை, யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் ம.அரவிந்தன் சுட்டிக் காட்டியிருக்கும் நிலையில், அவரது கருத்து எதிர் காலச் சந்ததியின் ஆரோக்கியம் தொடர்பான பெரும் அச்சத்தையும் எழுப்பியிருக்கின்றது.

ஒரு நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படும் இளைஞர்கள், தங்களின் துடிப்புமிக்க பருவத்திலேயே நீரிழிவு போன்ற ஒரு வாழ்நாள் நோய்க்கு ஆளாவது தனிப்பட்ட நபரின் பாதிப்பு மட்டுமல்ல, அது ஒரு சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூகவளர்ச்சியை முடக்கும் காரணியாகும். சிறுவயதிலேயே நீரிழிவு ஏற்படுவதால், அவர்கள் நீண்டகாலத்துக்கு இதய நோய்கள், சிறுநீரக செயலிழப்பு, கண் பார்வை பாதிப்பு போன்ற சிக்கல்களை எதிர்கொள்ளும் அபாயமும் அதிகம். இது அவர்களின் வாழ்நாள் எதிர்பார்ப்பைக் குறைப்பதோடு, தொழிற்படையின் உற்பத்தித் திறனையும் வெகுவாகப் பாதிக்கும்.

பொதுவாகவே நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் -குறிப்பாக இளைஞர்கள் மத்தியில்- அலட்சியப்போக்கே இருக்கின்றது. இவை வயதானவர்களுக்கு வரும் நோய்கள் என்ற தவறான புரிதலே இளைஞர்களின் கவனவீனத்துக்கு முதன்மைக் காரணம். ஆனால் நவீன தொழில்நுட்ப வளர்ச்சி தந்த சோம்பேறித் தனமான வாழ்க்கைமுறை, துரித உணவுகள் மீதான மோகம் மற்றும் போதிய உடற்பயிற்சி யின்மை ஆகியவை இளையோரையும் மெல்ல மெல்ல தொற்றாநோய்களுக்குள் தள்ளி வருகின்றன. நீரிழிவுத் தாக்கத்தில் யாழ்ப்பாணம் முன்னிலையில் இருப்பதற்கும் இதுவே காரண மாகியிருக்கின்றது. இன்றைய போட்டி உலகில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தம் நீரிழிவுக்கு ஒரு முக்கியமான காரணி என்பதையும் மறந்துவிடக்கூடாது.


நீரிழிவு என்பது குணப்படுத்தமுடியாத ஒன்றாக இருந்தாலும், முறையான கட்டுப்பாட்டின் மூலம் அதை வெற்றிகொள்ளமுடியும். உணவுக் கட்டுப் பாடு, உடற்பயிற்சி, கிரமமான மருத்துவப் பரி சோதனை, மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துதல் போன்றவற்றால் நீரிழிவைக் கட்டுக்குள் வைத்தி ருக்கமுடியும். அதேவேளை நீரிழிவு போன்ற தொற்றாநோய்களின் கட்டுப்பாடு என்பது, தனி மனிதர் சார்ந்த விடயம் என்று மட்டுப்படுத்தி விடவும் முடியாது. பாடசாலைகள், சமூகநிறுவனங் கள் மற்றும் ஊடகங்கள் ஒன்றிணைந்து இளை யோர் மத்தியில் ஆரோக்கியமான வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இனிப்பாலான இந்த அபாயத்தை வெல்வதற்கு கூட்டுப்பொறுப்புணர்வும், வருமுன் காக்கும் எச்சரிக்கை உணர்வும் மிக முக்கியம். அப்போதுதான் நம் இளைய சமுதாயம் வலுவான, வலிமையான மனிதர்களாக நிலைபெறமுடியும்.



## பொய்யாமொழி

**அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை**

**பொருள்:** பல்லக்கைச் சுமப்பவனும் அதன் மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா.




# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீரிழிவு நோயாளர் அதிகரிப்பு

*கொழும்புக்கு அடுத்தபடியாக முன்னிலை!*

**யாழ்ப்பாணம், பெப்.6**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை அதி கரித்து வருகின்றது என்று யாழ். போதனா மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் மகாலிங்கம் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் கொழும்பு மாவட்டத் துக்கு அடுத்தபடியாக, யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அதிகளவான நீரிழிவு நோயாளர்கள் பதிவாகியுள் ளனர். இளைஞர்கள் மற்றும் இளம் யுவதிகள் மத்தியில் நீரிழிவுத் தாக் கம் அதிகரித்து வருவது கவலைக் குரிய விடயமாகும். இந்த நிலைமை யைக் கருத்திற்கொண்டு, யாழ். போதனா மருத்துவமனை நீரிழிவுச் சிகிச்சை நிலையமும், யாழ்.மருத் துவ பீடத்தின் சமுதாயம் மற்றும் குடும்பநல மருத்துவத்துறையும் இணைந்து விசேட விழிப்புணர்வு நிகழ்வொன்றை ஏற்பாடுசெய் துள்ளன.

இந்த நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடம்பெறும்.

உலக மருத்துவ நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெறும் நிகழ்வில் வெறும் மருத்துவ ஆலோ சனைகள் மட்டுமன்றி ஆரோக்கிய மான உணவுமுறைகள் குறித்த வழிகாட்டல்கள், ஆரோக்கிய உணவு தொடர்பான விவாதங்கள், மருத்துவ மாணவர்கள் மற்றும் மருத்துவர்கள் பங்கேற்கும் விழிப் புணர்வுக் கலைநிகழ்வுகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (ச-இ)



## விசேட சோதனைகளில் 802 பேர் கைது

நாட்டில் போதைப்பொருளைத் தடுக்கும் நோக்கில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 802 பேர் போதைப்பொருள் களுடன் கைதுசெய்யப்பட் டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள் ளது. அத்துடன் தடுப்புக் காவல் உத்தரவு பெற்ற 16 பேரும், சட்டவிரோதச் சொத் துகள் தொடர்பான விசார ணைகளுக்கமைய ஒருவ ரும் கைதுசெய்யப்பட்டுள்ள னர் என்றும், 794 சோதனை கள் நடத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கைதுசெய்யப்பட்டவர்களில் 6 பேர் மறுவாழ்வு நிலையத் துக்கு அனுப்பப் பரிந்துரைக் கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்துள்ளது. (எ-இ)

## பாலியல் நோய் மருந்துகளுக்கு தட்டுப்பாடில்லை

எயிட்ஸ் நோயைத் தடுப் பதற் காக வழங்கப்படும் மருந்துக ளில் தற்போது 36,421 மாத் திரைகள் கையிருப்பிலுள் ளன என்றும் இந்த மருந்து களுக்குத் தட்டுப்பாடுகள் இல்லை என்றும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 41 சிகிச்சை மையங்கள் முன்னெடுக்கப் படுகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஜனவரியில் குவிந்த சுற்றுலாப்பயணிகள்

கடந்த ஜனவரி மாதம் 2 இலட்சத்து 77 ஆயிரத்து 327 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று சுற் றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித் துள்ளது. கடந்த மாதம் இந்தியாவிலி ருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணி கள் வந்துள்ளனர். (எ-இ)



## தென்னை ஏற்றுமதித்துறை; கடந்த ஆண்டில் சாதனை

இலங்கையின் தென்னை ஏற்று மதித்துறை, கடந்த ஆண்டில் 1.2 பில்லியன் டொலர் வருமானத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளது என்று இலங்கை தென்னைக் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் ஜயந்த சமரகோன் தெரி வித்துள்ளார்.

இது 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடு கையில் 43 சதவீத வளர்ச்சியாகும். தேங்காய்ப்பால், தேங்காய் கிறீம், தேங்காய் எண்ணெய் ஆகியவற் றிற்கு சர்வதேசச் சந்தையில் ஏற்பட் டுள்ள பெரும் கேள்வியே இந்த வளர்ச்சிக்குக் காரணமாகும் என் றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

நாளை
சனிக்கிழமை - தை 24
07.02.2026
சுபநேரம் : 03.35 - 05.05
ராகுகாலம் : 09.35- 11.05

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்





# உரும்பிராய் திருவருள்மிகு ஞானவைரவ சுவாமி கோயில்

## புனராவர்த்தன சமர்ப்பண உத்தமோத்தம நவகுண்டபக்ஷ பிரதிக்ஷ்டா

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2026

### (திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாத் திருமுகம்)



**எண்ணெய்காப்பு 05.02.2026 வியாழக்கிழமை**
**காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை**

**வைரவர் துதி**

திருச்சிற்றம்பலம்
ஊரோங்கும் உரும்பை நகர் ஞானவைரவர்
பேரோங்கும் பிறநாட்டில் உள்ளோரும் சேர்ந்து ஒன்றாய்
நீரோங்கு கண்கள் ததும்ப துதித்துருகி
சீரோங்க வைத்து எம்மை சிறப்புறக் காத்திடுவான்
திருச்சிற்றம்பலம்

**மஹா கும்பாபிஷேகம்06.02.2026 வெள்ளிக்கிழமை**
**காலை 7.20 மணிமுதல் 08.35 மணிவரை**

சிவபூமி, புண்ணியபூமி என நாயன்மார்களாலும் ஏனைய சைவக் குருமார்களாலும் விதந்து கூறப்பட்டதும், இராவணேஸ்வரனாலும் விபீஷணனாலும் நவகோடி லிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டதும் தக்ஷிண கைலாயம் எனப் போற்றப்படும் இலங்காபுரியின் வடபால் சைவமும், தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில் உரும்பிராய் பதியில் பன்னெடுங் காலமாக தன்னை நாடிவரும் அடியவர்களின் துயர்நீக்கி அருள் பாலிக்கும் ஞானவைரவப் பெருமானுக்கும் சிவலிங்கப் பெருமானுக்கும் விநாயகர் முதல் சண்டேஸ்வரர் வரையுள்ள பரிவார மூர்த்திகளுக்கும் நிகளும் மங்களகரமான விசுவாவசு வருடம் தைத்திங்கள் 23ம் நாள் (06.02.2026) வெள்ளிக்கிழமை உத்தராயணமும், பஞ்சமித்திதியும், அத்த நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 07.20 முதல் 08.35 மணி வரையுள்ள கும்ப லக்கின சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் எனும் திருக்குட நன்நீராட்டு விழா இடம்பெற திருவருள் கூடியுள்ளது. இத்தருணமும் இதன் முன் பின் இடம்பெறும் கிரியா நிகழ்வுகளிலும் மெய்யடியார்கள் யாவரும் கலந்துகொண்டு ஞானவைரவப் பெருமானின் திருவருள் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக.




### மகா கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி

ஈசன் அருளால் இனிதே நிறைவேறும் ஞானவைரவப் பெருமானின் திருக்குடமுழுக்கு நல்வாழ்த்துக்கள்!

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக் காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்"

எமது உரும்பிராய் மண்ணின் காவல் தெய்வமாகவும், வேண்டும் வரங்களை அள்ளி வழங்கும் வள்ளலாகவும் வீற்றிருக்கும் அருள்மிகு ஞானவைரவப் பெருமானின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இனிதே நடைபெறுவது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**இறைபணியில், க.சிவராஜா - தலைவர்,**
**ஆலய நிர்வாக சபை,**
**அருள்மிகு ஞானவைரவர் கோவில்,**
**உரும்பிராய்**

### செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி

சீரும் திருவும் நிறைந்த திருவூர் உரும்பிராய இத்திருவூரில் திருகோவில்கள் யாவும் மிகச் சிறப்பாகப் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகிறது. உரும்பிராய் கோப்பாய் வீதியில் அருட்சிறப்பு மிக்க தலமாக விளங்குவது ஞானவைரவர் ஆலயமாகும் இவ்வாலய கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பழைமை மிக்க இவ் வைரவர் ஆலயத்தை அடியவர்கள் காலத்துக்கு காலம் புதுப்பித்துப் பேணிப்பாதுகாத்து வருகிறார்கள். அற்புதம் நிறைந்த இத் திருக்கோவில் பூசகராக விளங்கிய அமரர் சிவஸ்ரீ கந்தையா குருக்கள் அவர்கள் மிகச்சிறப்பாக வழிநடத்தினார்கள். அவர்களிடம் பார்வை பார்ப்பதற்காக தினமும் பலர் இவ்வாலயத்துக்கு முன்வருவதை யான் கண்டுள்ளேன். இன்றும் ஆலயம் சிறப்பாக இயங்க ஒத்துழைக்கும் அனைவருக்கும் நன்றி கூறி அமைகிறேன். ஞான வைரவப் பெருமான் திருவருளால் அனைவரும் நலமாக வாழ நல்லாசி கூறி நிறைவு செய்கிறேன்.

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர் ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை,**
**தலைவர் சிவ பூமி அறக்கட்டளை, இலங்கை.**




### ஆலய பிரதமகுருவின் ஆசியுரை



இலங்கையில், வடமாநிலத்தில், உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், இயற்கை வளங்கள் நிறைந்த உரும்பிராய் பதியில் கோவில் கொண்டெழுந்தருளி அரசமர இலைகளின் சலசலப்பு ஓசையில் ஞானவைரவப் பெருமான் அருளாட்சி வழங்கிக் கொண்டிருக்கிறார். தற்போது 175 ஆண்டுகளுக்கு மேல் வரலாற்றினை கொண்டு விளங்கி நிற்கின்றது எம் ஞானவைரவர் ஆலயம். ஆகவே இப்பொழுது புனரமைப்பு செய்து மகா கும்பாபிஷேகம் செய்யும் வேளையில் இக்கும்பாபிஷேகம் என்பது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது இதைக் கொண்டும் மக்களுக்கு இந்த கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் மக்களுக்கு ஞானவைரவ பெருமானின் அருள் கடாட்சம் பெற்று வாழ வேண்டி நல்லாசி கூறுகிறேன்.

**சிவஸ்ரீ செல்வவைரவநாதக் குருக்கள்**
**ஞான வைரவர் ஆதீன கர்த்தா, ஞான வைரவர் கோயில்.**

## கிரியா கால விபரம்

| | | |
|---|---|---|
| 3 ம் நாள் கிரியை<br>தை மாதம் 23ம் நாள்<br>(06.02.2026) வெள்ளிக்கிழமை | காலை 7.20 மணி முதல்<br>8.35 மணிவரை | விக்ன கணபதி வழிபாடு, புண்ணியாக வாசனம், விசேட சந்தி, த்வஜஸ்தம்பு பூஜை, யாகசாலைப் பிரவேசம், யாக பூஜை, உபசார ஹோமம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, வேத தோத்திர திருமுறை பாராயணம், ராக தாள சமர்ப்பணம், நாட்டியாஞ்சலி, அந்தர்பலி, பகிர்பலி, யாத்திராதானம், கும்ப உத்தாபனம், மங்கள வாத்திய சகிதம் கும்பங்கள் தூபி அபிஷேகம், விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், மஹா கும்பாபிஷேகம், தசதரிசனம், ஆசியுரைகள், ஆசாரியர் ஸம்பாவனை, மஹா அபிஷேகம், விசேட பூஜை, வசந்த மண்டப பூஜை, மகேஸ்வர பூஜையும் நடைபெறும்.<br>மாலை எம்பெருமான் உள்வீதி, வெளிவீதி உலாவருவார். |

## மஹா கும்பாபிஷேக குருமார்கள்

### சர்வபோதகாச்சாரியர்கள்

பிரம்ம ஸ்ரீ க.மு. சோமசுந்தர குருக்கள்
பர்வதவர்த்தினி ஆலயம்
உரும்பிராய்

### பிரதிஷ்டா பிரதமகுரு

சிவாகம கிரியாவித்தகர், கிரியாபூஷணம்
ஈசான சிவாச்சாரியார்
சிவ ஸ்ரீ செல்வவைரவநாதக் குருக்கள்
ஆதீன கர்த்தா ஞானவைரவர் ஆலயம் - உரும்பிராய்

### ஸர்வ சாதகாசிரியர்கள்

சிவ ஸ்ரீ சண். நிர்மலேஸ்வரக் குருக்கள்
உரும்பிராய்
சிவ ஸ்ரீ ஜெயகுணசீலன் ஐயா - அளவெட்டி
சிவ ஸ்ரீ பேரம்பல நிஷாந்தனக் குருக்கள்

### நல்லாசி வழங்கும் குருமார்கள்

பிரம்ம ஸ்ரீ மஹாதேவ வத்ஸாங்க குருக்கள்
காயத்திரி பீடம் (இணுவில்)
சிவ ஸ்ரீ நவரத்ன பிரபு தேவ குருக்கள்
ஆதீன குரு முத்துமாரி அம்மன் ஆலயம்
கொழும்புத்துறை.

### நவகுண்ட மூர்த்திப குருமணிகள்

சிவ ஸ்ரீ ஐயப்பதாசக் குருக்கள் - ஐயப்பன் ஆலயம் (கட்டுவன்)
சிவ ஸ்ரீ ந.முரசொலிமாற குருக்கள் - கல்லடி, மட்டக்களப்பு.
சிவ ஸ்ரீ இ.ஈஸ்வரக் குருக்கள் (அளவெட்டி)
சிவ ஸ்ரீ பே. நிருஷனக் குருக்கள் - மஹாகாளி ஆலயம் (கோண்டாவில்)
சிவ ஸ்ரீ இ. அமிர்தேஸ்வரக் குருக்கள் (நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமி ஆலயம்)
சிவ ஸ்ரீ பி. லோகிதப்பிரபு குருக்கள் (உரும்பிராய்)
சிவ ஸ்ரீ வி.சிவாக் குருக்கள் - வித்தக விநாயகர் ஆலயம் (கோப்பாய்)
சிவ ஸ்ரீ அ.சுரேஸ்குமாரக் குருக்கள் - கோண்டாவில்
சிவ ஸ்ரீ க. நிரோஷனக் குருக்கள் - உரும்பிராய்

### யாக சம்ரட்சகர்கள்

சிவ ஸ்ரீ இ. நிரஞ்சன் ஸர்மா - பருத்தித்துறை
சிவ ஸ்ரீ யோ. டினோஜன் ஸர்மா - மட்டக்களப்பு
சிவ ஸ்ரீ உ.சாருஜன் ஸர்மா - மட்டக்களப்பு
சிவ ஸ்ரீ ல. டதுசன் ஸர்மா - மட்டக்களப்பு
சிவ ஸ்ரீ தெ. மிதுஸர்மா - மட்டக்களப்பு
சிவ ஸ்ரீ க. சுதாகரன் ஐயா - உரும்பிராய்

**அடியவர்கள் கும்பாபிஷேகத்திற்கு தேவையான சிவத்திரவியங்கள், பால், இளநீர், கற்பூரம், தேங்காய், பூக்கள், பூமாலை மற்றும் அபிஷேகத்திரவியங்களை வழங்கி எம் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம். தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும் பூர்த்தி நாளன்று 108 சங்காபிஷேகம் நடைபெறும்.திருப்பணி நிதி, மஹாகும்பாபிஷேக நிதி, மண்டலாபிஷேகம் செய்ய விரும்பும் அடியவர்கள் ஆலய பரிபாலன சபையினரை தொடர்பு கொள்ளவும்.**

சுபம்

ஆலய பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிப்ரவரி **15** 2026

# இலவச கருத்தரிப்பு ஆலோசனை முகாம்

**இடம்:**
ரோயல் பிரசாந்த் மருத்துவமனை,
வெள்ளவத்தை, கொழும்பு

**நேரம்:**
காலை 9.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை

குழந்தைப்பேற்றுக்கான அதிநவீன சிகிச்சைகளுடன் தற்போது இலங்கையில்...

## RPIFC ரோயல் பிரசாந்த் கருத்தரிப்பு மையம்




62, W.A.சில்வா மாவத்தை, வெள்ளவத்தை
infosl@prashanthivf.com www.prashanthivf.com



**IUI | IVF | ICSI | IMSI**

அழைக்கவும்: **0754000012**

### பெண்களுக்கு

- PCOD
- எண்டோமெட்ரியோசிஸ் நாரிழைகள், குழாய் அடைப்பு
- ஹிஸ்டராஸ்கோப்பி / 3D லாப்ராஸ்கோப்பி
- எம்பிரியோஸ்கோப்
- எம்பிரியோ க்ளூ
- சைட்டோபிளாஸ்மிக் டிரான்ஸ்பர்
- பிஆர்பி (Platlet rich plasma)
- பிஜிஎஸ் (Pre genetic screeing)

### ஆண்களுக்கு

- விந்தணு பகுப்பாய்வு
- டிஎன்ஏ (DNA) கூறாய்வு
- இம்சி (IMSI)
- அஸ்ஃஸ்பெர்மிக்
- 40x மைக்ரோஸ்கோப்



# யாழ்.அரியாலை வெட்டுக்குளம்
## அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
# 1008 சங்காபிஷேக பெருவிழா

விசுவாவசு வருடம் தை மாதம்
**23 ஆம் நாள் 06.02.2026 வெள்ளிக்கிழமை**



கலைமகளே கற்றவர்கள் கருதி நிறைபவளே
அலைமகளே வெட்டுக் குளத்தரசி மலைமகளே
புன்னெறி செல்லும் புழுத்தலைப் புலையனேற்கு
நன்னெறியே யென்றுநிலை நாட்டு

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்கலகரமான விசுவாவசு வருடம் தை மாதம் 23 ஆம் நாள் (06.02.2026) வெள்ளிக்கிழமை தேய்பிறை பஞ்சமி திதியும் அத்தநட்சத்திரமும் கூடிய சுபவேளையில் அம்பாளுக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் செய்ய திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அனைத்து கிரியைகளிலும் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்வீர்களாக.

## கிரியாகால நிகழ்வுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ◆ காலை | 6.00 | மணி | பூசை | மாலை | 5.30 | மணி | விஷேட பூசை |
| ◆ காலை | 8.00 | மணி | புண்ணியவாசம் | மாலை | 6.00 | மணி | வசந்த மண்டபபூசை |
| ◆ காலை | 8.30 | மணி | யாகபூசை | மாலை | 6.20 | மணி | திருவூஞ்சல் |
| ◆ காலை | 9.30 | மணி | அபிஷேக பூசை | இரவு | 7.00 | மணி | அம்பாள் கிராமப் பிரவேசம் |
| ◆ காலை | 11.00 | மணி | சங்காபிஷேகம் | நள்ளிரவு | 12.00 | மணி | பிராயச்சித்த அபிஷேகம் |
| ◆ காலை | 11.30 | மணி | விஷேட பூசை | | | | |

அதனைத் தொடர்ந்து மதியம் இடம்பெறும் மாகேசுவர பூசையிலும் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்

ஆலய அர்ச்சகர்
**பிரம்மஸ்ரீ சண்முகமாதுளசர்மா**

சிவாஹம கிரியா ஜோதி
**சிவஸ்ரீ ஜே.சிவகுமார் குருக்கள் (மறவன்புலோ)**

**அம்பாளின் கிராமப் பிரவேச வீதியுலா நடைபெறும்**

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

அரியாலைவெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
தேவஸ்தான பரிபாலன சபையினர் 2025 - 2026

பிரசுர அன்பளிப்பு:
**புலம்பெயர் வாழ் இத்திமரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச்சபை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் எண்ணெய் ஆய்வு சட்டச்சிக்கல்களால் தாமதம்

கொழும்பு, பெப்.6
மன்னார் வளைகுடாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்கான சர்வதேச விலைமனு நடைமுறை, நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குக் காரணமாக தாமதமடைந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை பெற்றோலிய மேம்பாட்டு அதிகார சபை இந்த மாதத் தொடக்கத்தில் சர்வதேச ஏலத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தது. இருப்பினும், சட்டச் சிக்கல்கள் காரணமாக அது தடைப்பட்டுள்ளது. இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ.ராஜகருண "சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துச் சட்டச் சிக்கல்களும் தீர்க்கப்பட்ட பின்னரே விலைமனு விடப்படும்," எனத் தெரிவித்தார். 2011ஆம் ஆண்டு இந்தியாவின் 'கெய்ர்ன் இந்தியா' நிறுவனம் நடத்திய ஆய்வில், மன்னார் வளைகுடாவில் உள்ள பராகுடா மற்றும் டொராடோ ஆகிய 2 கிணறுகளில் ஹைட்ரோகார்பன் படிவுகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இலங்கையின் கடல் பகுதியில் காவேரி படுகை, மன்னார் படுகை, தெற்கு இலங்கை படுகை, கிழக்கு இலங்கை படுகை என நான்கு முக்கியமான படுகைகள் உள்ளன. நாடாளுமன்ற ஊடகப் பிரிவின் 2021ஆம் ஆண்டு அறிக்கையின் படி, மன்னார் படுகையில் உள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களின் மதிப்பு சுமார் 267 பில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் இந்த அகழ்வாராய்ச்சித் திட்டங்களில் பங்கேற்க இந்தியா மற்றும் கட்டார் போன்ற நாடுகளைச் சேர்ந்த எண்ணெய் நிறுவனங்கள் ஏற்கனவே ஆர்வம் காட்டிவருகின்றன. அகழ்வாராய்ச்சிக்கான தடைகள் நீங்கும் பட்சத்தில், இலங்கை தனது எரிசக்தித் தேவையில் தன்னிறைவு பெறுவதுடன் பொருளாதார ரீதியாகவும் பெரும் வளர்ச்சியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்!

யாழ்ப்பாணம், பெப்.6
வல்வை சனசமூக சேவா நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் வல்வை சன சமூக சேவா நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-100)

# Invitation for Bids (IFB)
## MUNICIPAL COUNCIL, VAVUNIYA

[1]. The Chairman, Regional Procurement Committee (RPC), on behalf of **Commissioner, Municipal Council, Vavuniya** now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Work | Estimated Civil Cost (LKR in. Mn) | | CIDA Grade Required | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **Package - 01 -2026** | | | | | | |
| 1 | NP/14/43(2) /06/WD/RR DP/14/2026 | Improvement to 4th Lane kovilputhukkulam | 0.85 | 4.69 | C9 & Above (Highway Construction) | 47,000.00 | 22.05.2026 | 28.0 |
| | | Improvement to 2nd & 5th Lane Kovilkulam | 0.62 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to 4th Lane kovilkkulam | 0.62 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to 8th & 9th Connecting Lane Kovilputhukkulam | 0.99 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Kovilputhukkulam 6th Lane | 0.99 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Kovilputhukkulam Sudalai Veethy | 0.62 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | **Package - 02 -2026** | | | | | | |
| 2 | NP/14/43(2) /06/WD/RR DP/15/2026 | Improvement to Thachchankulam Road, Moonrumurippu | 1.45 | 4.67 | C9 & Above (Highway Construction) | 47,000.00 | 22.05.2026 | 28.0 |
| | | Improvement to Construction of Single Row 610mm Diameter 4.88m Long Hume Pipe Culvert at Thachchankulam Road Moonrumurippu | 0.41 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Alady Veethy Thachchankulam, Moonrumurippu | 0.99 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to 3rd Lane Thachchankulam, Moonrumurippu | 0.93 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Thachcankulam Left Side 1st, 2nd Lane, Moonrumurippu | 0.89 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | **Package - 03 -2026** | | | | | | |
| 3 | NP/14/43(2) /06/WD/RR DP/16/2026 | Improvement to Paddakkadu RDS Road | 0.99 | 4.47 | C9 & Above (Highway Construction) | 45,000.00 | 22.05.2026 | 28.0 |
| | | Improvement to Paddakkadu RDS Road B1 Lane | 0.87 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Veppankulam Streets Paddanichoor | 0.75 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Multi Purpose Road, Thirunavatkulam | 1.45 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Construction of Single Row 610mm Diameter 4.88m Long Hume Pipe Culvert at Multi Purpose Road, Thirunavatkulam | 0.41 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | **Package - 04 -2026** | | | | | | |
| 4 | NP/14/43(2) /06/WD/RR DP/17/2026 | Improvement to Pandarikulam Globe Mill by Lane | 1.24 | 3.72 | C9 & Above (Highway Construction) | 38,000.00 | 22.05.2026 | 28.0 |
| | | Improvement to Aathivinayagar Kovil Road | 0.74 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Maruthankulam 1st lane | 0.25 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to Periyarkulam 1st, 2nd,3rd Lane | 1.12 | | C9 & Above (Highway Construction) | | | |
| | | Improvement to puthiya Amaippu veethy, Poonthoddam | 0.37 | | C9 & Above (Highway Construction) | | | |

[2]. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.

[3]. Interested eligible bidders may obtain further information from **Commissioner, Municipal Council, Vavuniya (T.P:024-222 2275/ 024 222 8066 email: ucvavuniya@yahoo.com)** from **09.00 Hrs** to **14.30 Hrs** and inspect the bidding documents at the address **Commissioner, Municipal Council, Vavuniya.**

[4]. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule / Bidding Data" of the Procurement Document.

[5]. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address **Commissioner, Municipal Council, Vavuniya** from **06.02.2026 until 19.02.2026 from 09.00 Hrs to 14.30 Hrs**. Upon payment of a non-refundable fee of **Three Thousand Rupees (Rs.3,000.00).The method of payment will be by cash.**

[6]. Bids must be delivered to the address **Chairman, Regional Procurement Committee, Municipal Council, Vavuniya on or before 20th February 2026 and 10.30 Hrs**. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.

[7]. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.

[8]. The pre-bid meeting will be held on **12.02.2026 at 10.30 Hrs** at the **Municipal Council, Vavuniya.**

The address (es) referred to above is (are):

**Chairman**
**Regional Procurement Committee**
**Municipal Council**
**Vavuniya.**
**06.02.2026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்கல் நடுகை

சாவகச்சேரி, பெப். 6
சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தால், சாவகச்சேரி பொதுச்சந்தையின் மேற்குப்பக்கமாக புதிய கடைத்தொகுதியொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு சபையின் தலைவர் வ.சிறீபிரகாஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.
118 மில்லியன் ரூபா செலவில் இந்தக் கடைத்தொகுதி அமைக்கப்படவுள்ளது. அந்தப் பகுதியில் இருந்த கடைத்தொகுதிகள் கடந்த 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக முற்றாக அழிந்தமை குறிப்பிடத்தக்கது. (ம113)


## மரண அறிவித்தல்

### தருமலிங்கம் செல்வரத்தினம்



தோற்றம் 29.10.1937 — மறைவு 05.02.2026

அங்களப்பாய், இணுவில் கிழக்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தருமலிங்கம் செல்வரத்தினம் அவர்கள் நேற்று (05.02.2026) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற பொன்னையா அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், முத்துத்தம்பி சிவகாமிப்பிள்ளை அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற தருமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அமரர் சரஸ்வதி, இந்துமதி, மகேந்திரன் ஆகியோரின் சகோதரியும், பாலச்சந்திரன், திருச்செல்வம், முத்துராசா, செல்வராணி, தர்மராணி, பாஸ்கரன், மகாராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராணி, விஜயலட்சுமி, கௌரி, சிவலோகநாதன், வரதராஜா, பகவத்கீதா, சிவகுமார் ஆகியோரின் மாமியாரும், மயூரி, மாதுரி, கஜமுகன், நிரோசன், டினோஜா, மிதுலா, மதுரா, கௌசிகன், சயந்தன், மகாசேனன், காயத்திரி, வித்யா, தனகோபி, தனுஜன், தனுசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தொடர்பு:
021 300 2563

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31153) A

## நினைவஞ்சலிக் கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் ஆகிய மாதிரி முன்பள்ளிகளின் தலைவரும் நிறுவுனருமான



அமரர்
**அப்பாத்துரை பஞ்சலிங்கம்**
தோற்றம் : 08.01.1936 — மறைவு : 28.12.2025

அவர்களின்
நினைவஞ்சலி கூட்டம்
நடைபெறவுள்ளது.

காலம்: 07.02.2026 சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் :- உரும்பிராய் கிட்ஸ் பார்க் மண்டபம்
(முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கு)

கல்விப்புலத்தில் கலங்கரை விளக்காகவும் தனது சீரிய பணியில் ஆளுமைமிக்க பல ஆசான்களையும், மாணவர்களையும், கல்வி நிறுவனங்களையும் உருவாக்கி காலமெல்லாம் தன்னை கல்விப்பணியில் அர்ப்பணித்த செயல்வீரனின் நினைவுகூர் நிகழ்விற்கு வருகை தருவதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்.

## மரண அறிவித்தல்

### குருநாதன் தையல்நாயகி



தோற்றம் 15.04.1939 — மறைவு 05.02.2026

மண்டைதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை 1ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதன் தையல்நாயகி அவர்கள் நேற்று (05.02.2026) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - கண்ணாத்தை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தேசிங்கம் - அன்னக்கிளி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற குருநாதன் அவர்களின் அன்பு மனைவியும், வரதராசா (மதிநிலா ஸ்ரோர்ஸ், பூங்கங்குளம்), சதீஸ் (ஆசிரியர் வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவகாமி, கமலலம்மா, சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலேஸ்வரியின் பாசமிகு மாமியாரும், லக்சன், லஜிதா, மதுநிதா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை 1ம் வட்டாரம்

தகவல் :
குடும்பத்தினர்.

(CS/60661) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
15
06
1949



மறைவு
02
02
2026

# அமரர் திருமதி ஏகாம்பரம் சிரோன்மணி

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி.ஏகாம்பரம் சிரோன்மணி அவர்கள் 02.02.2026 திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா தங்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லையா தங்கமுத்துவின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற ஏகாம்பரம் (சாம்பு) அவர்களின் நேசமிகு மனைவியும் மதிவதனன் (மதி-பாரத் உணவகம்), மதிவதனி (செல்வி), மகிந்தன், சுலோசனா, சுஜித்தா (சுஜி) ஆகியோரின் பேரன்புமிகு தாயாரும் நளினி, வைகுந்தராசன் (ராசன்), தேவமலர் (தேவா), பார்த்தீபன் (தீபன்), மதன் ஆகியோரின் அன்பிற்கினிய மாமியாரும் காலஞ்சென்றவர்களான ராசமணி, கனகம்மா, கிருஸ்ணபிள்ளை, துரையப்பா, பாக்கியம் (பிள்ளையம்மா), நாகரெட்ணம் (பொன்னையா), கணேசமூர்த்தி (துரைசாமி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கணேஸ், கணபதிப்பிள்ளை, நீலாம்பிகை, நல்லையா, பரமேஸ்வரி, சிவகுரு, சிவகாமிப்பிள்ளை, காமாட்சி, தனலெட்சுமி, பாலசிங்கம் மற்றும் சுபத்திராதேவி, தங்கமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் கௌசிகன், மீரா, கீரா, துவாரகன், சஜித், அஜின், விஸ்வா, சைய்ரா ஆசைமிகு அம்மம்மாவும் கௌதமி, காவியா, கவின், சோதியா, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் காலஞ்சென்றவர்களான சரவணபவான், புஸ்பகாந்தன் மற்றும் மகாலிங்கம், மல்லிகாதேவி, மகாலெச்சுமி, இராஜலெச்சுமி, பஞ்சலிங்கம், ரஞ்சனாதேவி, ரதிதேவி, பரமலிங்கம், வாமதேவன், சரோஜினிதேவி, தயாபரன், கிருபாதேவி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் கமலாசினி, சந்திரமதி, ரஞ்சினி, நகுலேஸ்வரன், திலகவதி, உதயகலா, இதயசேகர், அன்பழகன், அன்பரசி, அன்புச்செல்வன், அன்பமுதன், துசியந்தன், துசியந்தி, துவாதரன், துளசிதாசன், துசானந் காலஞ்சென்றவர்களான சுலோசனா, வனிதராசன், மனோன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

| பார்வைக்கு | ஈமக்கிரியை | இறுதிக்கிரியை | Funerarium |
|---|---|---|---|
| 03.02.2026 (செவ்வாய்) பிற்பகல் 15.00-16.00, 07.02.2026 (சனி), 10.02.2026 (செவ்வாய்) | 11.02.2026 புதன்கிழமை 09.00 - 11.30 | 11.02.2026 புதன்கிழமை 11.45 - 12.45 | 95 rue Marcel Sembat 93430 Villtaneuse |

தொடர்புகளுக்கு
மதி 00 33 768 87 28 50 / 00 33 6 03 37 38 24
மகிந்தன் 0033 652 35 42 22 - ராசன் 00 33 6 52 35 57 04
தீபன் 00 33 6 62 40 60 21 - மதன் 0049 176 23 41 87 37

## மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 06 . 1965



மறைவு
04 . 02 . 2026

### அருணாசலம் குகராஜ்

**ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்**
**(யாழ்.போதனா வைத்தியசாலை)**

கைதடி நுணாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் குகராஜ் அவர்கள் கடந்த 04.02.2026 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் - தனலக்சுமி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற பத்மநாதன் - தனலட்சுமி தம்பதியரின் மருமகனும், நயனவதி (ஆசிரியர், யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும் காயத்ரி அவர்களின் அன்புத் தந்தையும், கௌசலா, பத்மினி, நிர்மலா விக்னராஜ், வசந்தலா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2026) வெள்ளிக்கிழமை கைதடி நுணாவிலில் உள்ள அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் குச்சுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி, நுணாவில்.
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, மகள்
T.P: 077 55 89 147

(CS 80658) A

## அஞ்சலிக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.6

அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கத்தின் நினைவஞ்சலிக்கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் இடம்பெறவுள்ளது. இவர் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும், கொக்குவில் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்க நம்பிக்கை நிதியத் தலைவரும் ஆவார். (எ-41)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.6

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும். நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் நாக. சிவசிதம்பரம் கலந்துகொண்டு 'செம்மை நலம் அறியாத....'எனும் தலைப்பில் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ச-66)

# INVITATION FOR BIDS (IFB) 2026 /02
## Valikamam South Pradeshiya Sabha
## Council Fund

1. The *Chairman*, *Divisional Procurement Committee* on behalf of the *Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam, Jaffna.* now invites sealed bids from eligible and qualified bidders for construction work listed in the **Table below. All relevant details are listed in the same Table.**
2. Bidding will be conducted through *National Competitive Bidding (NCB)* Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the works estimated above Rs.5.0million."**
4. Qualification requirements to qualify for contract award are specified on **Bidding Data (Section 02), Contract Data (Section 04) and Schedule (Section 09) of Procurement Document (SBD 2)**
5. Interested bidders may obtain further information from *the address stated in clause 6 below* and inspect the bidding documents at the **same place** on any working day from 06.02.2026 to 05.03.2026 between **09:00hrs and 15:00hrs**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the *Chairman, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam, Jaffna. (Tel: 021 224 0017, Fax: 021 224 0327, mail: worksvsps@gmail.com)* from 09:00 hrs to 15:00 hrs during the period stated in the **Table below**, upon payment of a non-refundable fee of mentioned in the **Table**. The method of payment will be *Cash.*
7. Bids shall be delivered to the address below at *Chairman, Divisional Procurement Committee, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam, Jaffna,* on or before *02:30 PM as stated in the Table below.* Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at *Conference Hall, Valikamam South Pradeshiya Sabha, Chunnakam, Jaffna.* commencing at *10:30:00 AM* as stated in the table below.
9. All bids shall be accompanied by a *Bid Security, Refundable Cash Deposit/ Bank Draft to the amount as stated in the Table Below*

| | Document Issuing/Purchasing Period | | | From 06.02.2026 To 05.03.2026 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 10:30:00 AM on 19.02.2026 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 02:30:00 PM on 06.03.2026 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(15)/02/05/CF-Cons-01/2026/02 M.M | Construction of shopping complex (Phase II) at Maruthanar madam | 160.25 | 360 | C4 or above (Buildings) | 30,000.00 | 1,602,500.00 | 02.07.2026 (119 Days) | 04.06.2026 (91 Days) |

06.02.2026

Chairman,
Divisional Procurement Committee,
Valikamam South Pradeshiya Sabha,
Chunnakam,
Jaffna.

(CR 470241)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில்...

கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் தெற்குப் பகுதியில் வங்காள விரிகுடாவில் மேற்கு நோக்கி நகரும் அயன சமுத்திர வளித்திணிவின் செல்வாக்கோடு கூடிய காற்றுச் சுழற்சி காரணமாக, வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது கிடைத்து வரும் மழையுடனான காலநிலை இன்றும் தொடர்வதற்கு வாய்ப்புள்ளது.
அத்துடன், கிழக்கு, மத்திய, ஊவா, மேற்கு, சப்ரகமுவா, தெற்கு மாகாணங்களிலும் பரவலாக மழைக்குச் சாத்தியம் உள்ளது. குறிப்பாக கொழும்பு மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு அடுத்த மூன்று நாள்கள் மழை தொடரும். இதேவேளை, வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு கரையோரங்களில் காற்றின் வேகம் சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது - என்றார். (அ-ம-66)

## இ.போ.ச....

இதையடுத்து, பருத்தித்துறையில் இருந்து மற்றொரு பேருந்து வரவழைக்கப்பட்டு பயணிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர்.
வடமராட்சி கிழக்குப் பகுதியில் தற்போது பயன்பாட்டிலுள்ள அரச பேருந்துகள் அண்மைக்காலமாகத் தொடர்ச்சியாகப் பழுதடைந்து வருகின்றன. இது தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட பின்னரும் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## 3 ஆண்டுகளில்...

மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என்று நாங்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம். அந்த வாக்குறுதிக்கு அமைய நிச்சயம் செயற்படுவோம். எதிர்வரும் 3 வருடங்களில் 30 வீதத்தால் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்போம்.
நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்கும்போது ஓர் அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான சராசரி செலவு 37 ரூபாவாக இருந்தது. தற்போது அதனை 29 ரூபாவாகக் குறைத்துள்ளோம். ஓர் அலகு மின்சாரத்தின் உற்பத்திச் செலவை 25 ரூபா வரை கொண்டு வருவதே அரசாங்கத்தின் அடுத்தகட்ட இலக்காகும். மின் உற்பத்திக்கான செலவைக் குறைக்காமல் கட்டணத்தைக் குறைக்க முடியாது. தற்போது அதிக விலைக்கு மின்சாரத்தை வாங்கி குறைந்த விலைக்கு விற்பனை செய்யும் நிலையே காணப்படுகிறது. எமது திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து, அதன் நன்மையை மக்களுக்கு வழங்குவோம் - என்றார். (அ-ம)

## மக்களின்...

நோக்கத்தில்தான் நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்றோம். அதற்கான அடித்தளங்களை வலுவாக அமைத்து வருகின்றோம். நாட்டில் தற்போது உறுதித்தன்மை ஏற்பட்டுள்ளது. மக்கள் எம்மை ஆதரிக்கின்றனர். அவர்களின் ஆதரவு எமக்கு உள்ளது என வலுவாக நம்புகின்றோம்.
மக்களின் விருப்பத்துக்கு மாறாக ஆட்சியில் இருப்பதற்கு நாங்கள் முயற்சிக்க மாட்டோம். ஏனெனில் அதிகாரத்தை சுயநலத்துக்காகவும், மோசடியாகவும் பயன்படுத்தும் தரப்பு நாங்கள் அல்லர். இதை மக்கள் புரிந்து வைத்துள்ளனர் -என்றார். (அ-ம-44)

## ஜனாதிபதி...

அநுரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அந்த அழைப்புக்கு அமையவே, ஜனாதிபதி அநுர இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிஷினி கொலன்ன ஜனாதிபதி அநுரவின் பயணத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.
இலங்கையில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கும், 13ஆவது திருத்தம் முற்றாக நடைமுறைக்கு வருவதற்கும் இந்தியா தலையீட்டைச் செலுத்த வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன. இவ்வாறான நிலையில், ஜனாதிபதி அநுரவின் இந்தியப் பயணம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.
ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளரான ரில்வின் சில்வா தலைமையில் விசேட குழுவொன்று நேற்று இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் குஜராத், கேரள மாநிலங்களில் இந்தக் குழுவினர் விசேட சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## இலங்கை...

தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதை ஜனாதிபதி அநுர தவிர்த்திருந்தார். இதற்கு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் ஜனாதிபதி அநுர மீது சரமாரியான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
போரை நிறைவுக்குக் கொண்டுவந்த படையினர் தொடர்பில் சுதந்திரதினத்தில் பெருமையாகப் பேசப்பட வேண்டும். அதுவே எமது மரபாக உள்ளது. சில நாடுகளில் முதலாம் உலகப்போரில் கிடைத்த வெற்றி தொடர்பில் தற்போதும் பேசுகின்றனர். ஆனால், ஜனாதிபதி அநுரவுக்கு அத்தகைய முதுகெலும்பு இல்லை.
நாங்கள் தமிழர்களுக்கு எதிராகப் போர் புரியவில்லை. ஒருபோதும் அழிக்கப்பட முடியாது எனக் கருதப்பட்ட விடுதலைப் புலிகளையே வீழ்த்தினோம். புலிகளைத் தோற்கடித்ததை அரசாங்கம் இனவாதமாகக் கருதுகின்றது. இது இனவாதம் அல்ல - என்றார். (அ-ம-44)

## காணாமல்...

யோர் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச சாட்சியமளிக்க நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ள நிலையில் அவர் இந்த வழக்கில் சாட்சியமளிப்பதைத் தொடர்ச்சியாகத் தவிர்த்து வந்ததுடன் இணையவழியாகச் சாட்சியமளிப்பதற்கு நீதிமன்றத்திடம் அனுமதி கோரியுள்ளார். இவ்வாறான நிலையிலேயே இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. (அ-ம-66)


# Invitation for Bids

01. The Chairman, Regional Procurement Committee invites sealed bids from contractors capable of continuously providing following supply services to the Teaching Hospital, Jaffna for the years 2025/2026.

02. Interested parties may obtain bid documents from the Procurement Division of Teaching Hospital, Jaffna by submitting a written request along with a copy of their National Identity Card and the receipt obtained after paying the bid document fee, as indicated in the table below, to the Shroff Section of Teaching Hospital, Jaffna. Documents can be collected during normal working days from 9:00 AM to 4:00 PM, between 2026 - February - 09 (Monday) and 2026 - March -03 (Tuesday).

| No | Procurement | Bid Document Fee Value (Rs) | Bid Security Value (Rs) |
|---|---|---|---|
| 01 | Provision of Laundry Services - 2025/2026 | 3,000.00 | 200,000.00 |

03. The following essential qualifications must be fulfilled for the "Provision of Laundry" Services contract.

I. Registration certificate issued by the Divisional Secretary of the relevant area for government approved community organizations.
II. A certified copy of either the Divisional Secretary's certificate confirming the operation of a laundry, drying, and ironing business, or the company registration certificate from the Registrar of Companies.
III. A certificate confirming that the applicant hospital possesses adequate laundry drying facilities commensurate with the volume of linen to be processed.
IV. Certificate of suitability for the laundry and drying facilities, issued by the Medical Officer of Health responsible for the area where the laundry and drying facilities are located.
V. A certificate detailing approximately two (02) years of prior service experience. (For applications pertaining to teaching hospitals and general hospitals, a certificate or certificates of experience obtained from a government, semi-government, or private institution/institutions that process more than 500 pieces of laundry per month must be submitted.) The Procurement Board reserves the discretion to consider awarding this contract to a novice applicant who fulfills all other qualifications but lacks service experience, provided they furnish a 10% performance guarantee.
VI. Environmental Clearance issued by the Central Environmental Authority.
VII. Registration certificate under Clause 8 of the Public Contracts Act.

04. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Director, Teaching Hospital, Jaffna at the above address during 09.00 am to 16:00 hours on any working day from 2026 - February - 09 (Monday) and 2026 -March- 03 (Tuesday). upon payment of a non-refundable fee of Sri Lankan Rupees three Thousand (Rs. 3,000.00). The method of payment will be cash & should be made at the shroff of the Hospital.

05. The bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka in terms of the Public Contract Act No. 03 of 1987 and the Certificate of Registration or payment receipt shall be submitted along with the bid.

06. Bids must be delivered to the address below at or before 10:00 am on 2026 - March - 04 (Wednesday), when bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the address below; late bids will be rejected. Bidding document Should be in A4 size & should be spiral binding/Perfect binding (Glued spine like paperback books)

07. All bids shall be accompanied by a Bid-Security in favour of the Director, Teaching Hospital - Jaffna. Acceptable Bid Security details & Bid validity period is as per the Bidding Document.

08. The Chairman reserves the right to reject any or all Bids and the right to accept any portion of a bid, at any time prior to awarding of a contract without giving any reasons for such. Client is not bound to caccept the lowest or any bids. Procurement Committee will not be responsible for any costs or any expenses incurred by the Bidders in connection with the preparation or delivery of Bids.

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** நண்பர்கள் மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

# புலிகளின் ஆதரவாளர்களுக்காக நடத்தப்பட்டதா சுதந்திரதினம்?

## மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் சரத் வீரசேகர

**கொழும்பு, பெப்.6**

**78ஆவது சுதந்திரதின விழா நாட்டுக்காக நடத்தப்பட்டதா? அல்லது புலி ஆதரவு தமிழ் பிரிவினைவாத டயஸ்போராக்களைத் திருப்திப்படுத்த நடத்தப்பட்டதா? என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் மூத்த உறுப்பினரான முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை 17 தடவைகள் ஆக்கிரமிப்புக்குள்ளாகியது. எனினும் எமது மூதாதையர்கள் எமது நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாத்தனர். 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்றாலும் 72ஆம் ஆண்டிலேயே அது முழுச் சுதந்திரமாக மாறியது.

புலிகள் அமைப்பை எமது படையினரே வெற்றிகொண்டனர். இதற்காக பலர் உயிர்த்தியாகம் செய்தனர். மேலும் பலர் அங்கவீனமுற்றார்கள்.

போரை முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய இராணுவத் தளபாடங்கள் இம்முறை காட்சிப்படுத்தப்படவில்லை. படை நடவடிக்கையில் பங்கேற்ற படையினர் அணிவகுப்பாக செல்லும்போது போரை முடித்தது பற்றிக் கூறவில்லை. டித்வா புயல் பற்றியே பேசப்பட்டது. இது தவறாகும். புலி டயஸ்போராக்களுக்கு அச்சம் காரணமாகவே அதைச் சொல்லாமல் இருந்திருக்கலாம்.

போர்த் தளபாடங்கள் வெளிநாடுகளில் உற்பத்தி செய்தவை, எனவே, அவற்றைக் காட்சிபடுத்தவேண்டியதில்லை என ஆளுங்கட்சி கூறுகின்றது. அப்படியானால் அணிவகுப்பில் சென்ற படையினர் வைத்திருந்த துப்பாக்கி உள்நாட்டில் செய்யப்பட்டதா?- என்றார். (ஏ-44)

# 'காந்தீயம்' வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.6

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகாரபூர்வ ஏடான 'காந்தீயம்' இதழின் ஜனவரி மார்ச் மாத இதழ் வெளிவந்துள்ளது.

இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சு.சுசீந்திரராஜா எழுதிய 'ஹன்டி பேரின்பநாயகத்திடம் மூன்று மாத படிப்பு ஏற்படுத்திய தொடர்பு' என்ற கட்டுரையும் 'வினோபாவின் கல்விச் சிந்தனைகள்', இதழாசிரியர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி எழுதிய 'ஆன்மிக அரசியல் தலைவரான மகாத்மா காந்தி', 'தேசிய கல்விக்கொள்கைக்கு உரமூட்டிய ஹன்டி பேரின்பநாயகமும் சுவாமி விபுலானந்தரும்' என்ற ஆக்கங்களோடு உருத்திரபுரம் காந்தி நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் காந்தி தின நிகழ்வுகளின் புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. (ச-159)

# தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களிடம் வழங்கவேண்டும்

## தீபிகா உடகம வலியுறுத்து

கொழும்பு, பெப்.6

தமக்கு என்னவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்குவதன் ஊடாகவே புதிய அரசியலமைப்பு குறித்த பொதுமக்களுடனான கலந்துரையாடலை அர்த்தமுள்ளதாக மேற்கொள்ளமுடியும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் பேராசிரியர் தீபிகா உடகம வலியுறுத்தியுள்ளார்.



அரசியலமைப்பு மறுசீரமைப்புச் செயன்முறை ஊடாக நாடளாவிய ரீதியில் மக்கள் எதனை எதிர்பார்க்கிறார்கள் எனச் சிந்திக்கவேண்டும். கொழும்பிலுள்ள ஒரு தரப்பு நினைப்பது மாத்திரம் சரியானதாக இருக்காது. இதன் வெளியீடு மக்களுக்குத் திருப்திகரமானதாக அமைவதற்கு, இச்செயன்முறை தொடர்பாக பொதுமக்களுடனான கலந்துரையாடல் சகலரையும் உள்ளடக்கியதாகவும், உரிய முறையிலும் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.03.1969 | 05.02.2026 |



**சிவகுரு சிவாஸ்காந்தன்**
**(ரூபன் களஞ்சியம் உரும்பிராய்)**

உரும்பிராய் வடக்கு, உரும்பராயை பிறப்பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவாஸ்காந்தன் (ரூபன் களஞ்சியம் உரும்பிராய்) நேற்று (05.02.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு மற்றும் மலர்சோதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் ஜெயலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஆனந்தலக்சுமி (மாலா) (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவலிங்கம், உமாதேவி, இந்திராதேவி, சிவநேசன், காலஞ்சென்ற சிவபாலன், சிவரூபன், சிவகரன், கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2026) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் உரும்பிராய் வடக்கில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31151) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.